**OS. 87/2021**

**நாள். 02.03.2023.**

**வா.சா. 1 –** முருகேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சுசிலா என்பவர் என் உடன் பிறந்தவர்களில் மூத்தவர் என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்தில் மேற்குப்பகுதியில் 1ம் பிரதிவாதி வீடுகட்டியிருந்தார் என்று சொன்னால் வழக்கிற்கு முன்பு 1 வருடத்திற்கு முன்பு கட்டினார். 10ம் இலக்கத்தில் 1ம் பிரதிவாதி வீடுகட்டியிருந்தார் என்று சொன்னால் வழக்கிற்கு முன்பு 1 வருடத்திற்கு முன்பு கட்டினார். அவ்வாறு அவர் கட்டிய வீடுகளுக்கு எப்போது வரிப்பதிவு ஏற்பட்டிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த வீடுகளுக்கு கதவு எண்கள் கொடுக்கப்பட்ட வரிவிதிப்பு ஏற்பட்டிருக்கிறதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா 1ம் இலக்க சொத்தில் 2ம் பிரதிவாதி 1984ல் ஒரு தார்ச் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்று சொன்னால் தவறு. 3ம் பிரதிவாதி தாவா 1ம் இலக்க சொத்தில் வீடுகட்டி குடியிருந்து வந்தார். அவ்வாறு 3ம் பிரதிவாதி வீடுகட்டி குடியிருக்கும் பகுதி நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு அருகில் மேற்கே உள்ளது. 3ம் பிரதிவாதி வீடுகட்டி குடியிருக்கும் பகுதிக்கு மேற்கே 1ம் இலக்க சொத்தின் பிறபகுதி சொத்து இருந்து வருகிறது என்றால் சரிதான். 1ம் இலக்க சொத்தில் 3ம் பிரதிவாதி கட்டியுள்ள வீட்டிற்கு மேற்கு பகுதியில் 1ம் பிரதிவாதி ஆக மேற்குப்பகுதியில் கட்டியுள்ள வீடு இருக்கிறது. அவரது வீட்டிற்கும் 3ம் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையில் காலி இடமாக இருக்கிறது. 3ம் பிரதிவாதிக்கு 1ம் இலக்க சொத்தில் தார்ச் வீடு இருக்கிறதா என்று சொன்னால் அவருக்கு ஓட்டு வீடு தான் இருக்கிறது. தார்ச் வீட்டிற்கு வரிவிதிப்பு கூடுதலாக இருக்கும் என்றால் சரிதான். ஓட்டு வீடா, தார்ச் வீடா என்று 3ம் பிரதிவாதியின் வரிவிதிப்பை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியின் வீடு 1ம் இலக்க சொத்தில் எப்போது கட்டடப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் 1ம் இலக்க சொத்தில் கீழ்பகுதியில் 2004ம் ஆண்டு வீடுகட்டி குடியிருந்து வருகிறேன். நான் வீடு கட்டும்போது 3ம் பிரதிவாதியின் ஓட்டு வீடு இருந்தது. நான் வீடு கட்டுவதற்கு முன்பே 2000 ஆண்டு வாக்கில் தாவா 1ம் இலக்க சொத்தில் 3ம்

பிரதிவாதி  தார்ச் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.  தாவா 10ம் இலக்க சொத்தில் என் தகப்பனார் காலத்தில் கட்டப்பட்ட ஓட்டு வீடு இருந்தது என்று சொன்னால் சரிதான்.  அந்த ஓட்டு வீடு தற்போது இல்லை.  தாவா 10ம் இலக்க சொத்தில் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது.  அந்த வீட்டிற்கு கிழக்குப்பகுதியில் 2ம் பிரதிவாதியின் மகன் முருகானந்தம் என்பவர் சுமார் 16 வருடங்களுக்கு முன்பு வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் வழக்கிற்கு முன்பு தான் வீடுகட்டினார்.  அவர் வழக்கிற்கு ஒரு வருடம் முன்பு கட்டினார்.  வீடு கட்டிய ஆண்டு தெரியாது.  முருகானந்தம் கட்டிய வீட்டிற்கு வீட்டுவரிப்பதிவு எப்போது இருந்து வருகிறது என்று பார்த்தால் அவர் எப்போது வீடு கட்டினார் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான்.  நான் சொல்வதுபோல் வழக்கிற்கு 1 வருடத்திற்கு முன்பு வீடுகட்டவில்லை என்றும் சுமார் 16 வருடங்களுக்கு முன்பே வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல.  தாவா 10ம் இலக்க சொத்தில் 1ம் பிரதிவாதி மற்றும் முருகானந்தம் ஆகியோர் கட்டிய வீடுகள் போக கிழக்குப்பகுதியில் காலியிடமாக இருக்கிறது என்று சொன்னால் சரிதான்.  10ம் இலக்கத்தில் உள்ள ஓட்டுவீட்டில் தான் 1, 2 பிரதிவாதிகள் உள்ளிட்ட சின்னவேலு குடும்பத்தார்கள் குடியிருந்து வந்தார்கள்.  அந்த ஓட்டுவீடு இரண்டு வீடுகளாக சேர்ந்த நான்கு பகுதிகளை கொண்ட ஒரே கட்டுமானம் கொண்ட வீடு என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பு நானும், 3, 4 பிரதிவாதிகளும் சேர்ந்து அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பில் 1, 2 பிரதிவாதிகள் எப்போது வீடு கட்டினார்கள் என்று சொல்லியிருக்கிறோம்.  குறிப்பாக வழக்கிற்கு சுமார் 1 வருடத்திற்கு முன்பு வீடு கட்டியதாக சொல்லியிருக்கிறோம். எதிர்வழக்குரையில் 2ம் பிரதிவாதி தரப்பில் வீடுகட்டியதாக சொல்லியுள்ள விவரங்கள், காலங்கள் பற்றி சரியானதாக இருந்ததால் தான் எங்களது அறிவிப்பில் அவர்கள் வீடுகட்டியுள்ள விவரங்கள் மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல.  என்னுடைய பிராதில் 1, 2 பிரதிவாதிகள் எப்போது வீடுகட்டினார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.  அவ்வாறு 1, 2 பிரதிவாதிகள் வீடுகட்டும்போது நான் ஆட்சேபனை தெரிவித்தேன்.  நாங்கள் அனுப்பிய அறிவிப்பில் 1, 2 பிரதிவாதிகள் வீடுகட்டும்போது ஆட்சேபனை தெரிவித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.  பிராதிலும் எப்போது ஆட்சேபனை தெரிவித்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்னதுபோல 1, 2 பிரதிவாதிகள் வீடுகட்டும்போது ஆட்சேபனை தெரிவித்ததாகவும், அதேபோல் 1, 2 பிரதிவாதிகள் வழக்கிற்கு 1 வருடத்திற்கு முன்பு வீடுகள் கட்டியதாகவும் சொல்லியிருப்பது பொய் என்று சொன்னால் சரியல்ல. முருகானந்தம் வீடு கட்டியதாக பிராதிலும், அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்தில் 1ம் பிரதிவாதியின் மகன் சண்முகம் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் அவர் வழக்கிற்கு சுமார் 1 வருடத்திற்கு முன்பு வீடு கட்டியுள்ளார். மேற்படி சண்முகம் கட்டிய வீட்டிற்கு வரிவிதிப்பு பார்த்தால் அவர் எப்போது வீடு கட்டினார் என்று தெரியவரும் என்று சொன்னால் சரிதான். 1ம் இலக்க சொத்தில் 1ம் பிரதிவாதி குடியிருந்து வந்த பகுதியில் அவரது மகன் சண்முகம் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு தார்ச் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றும் வழக்கிற்கு சுமார் 1 வருடத்திற்கு முன்பு கட்டினார் என்று நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சண்முகம் வீடுகட்டி குடியிருந்து வரும் பகுதி 1ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனாரால் பிரித்துக் கொடுத்த பகுதி என்றும் அதனால் தான் சண்முகம் வீடு கட்டி குடியிருந்து வருவது பற்றி என் அறிவிப்பிலோ, வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. முருகானந்தம் வீடுகட்டி குடியிருந்து வரும் பகுதி 2ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனாரால் பாகம் பிரித்து கொடுக்கப்பட்ட பகுதி என்பதால் தான் அதனை பற்றி என் அறிவிப்பிலோ, வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ள விவரம் பற்றி என் அறிவிப்பிலோ, வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நானும், 3, 4 பிரதிவாதிகளும் சேர்ந்து தான் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் என்னுடன் சேர்ந்து ஏன் தாக்கல் செய்யவரவில்லை என்பதை என்னுடைய பிராதில் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி அந்த சமயத்தில் மதுரையில் இருந்தார். ஆனால் 3ம் பிரதிவாதி இங்கு தான் இருந்தார். 4ம் பிரதிவாதிகள் கொரோனா அச்சத்தினால் அவர் வரவில்லை. 3ம் பிரதிவாதி என்னுடன் சேர்ந்து வழக்காட வரவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதியின் மகளை நான் திருமணம் செய்திருக்கிறேன். எனக்கு திருமணம் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு நடந்தது. கொரோனா அச்சத்திற்கு பிறகும் 4ம் பிரதிவாதி என்னுடன் சேர்ந்து வழக்கு நடத்தவரவில்லை. பூர்வீக சொத்துக்களில் விவசாய நிலங்களும் இருக்கிறது என்றால் சரிதான். அந்த பூர்வீக சொத்தில் உள்ள விவசாய

நிலங்களை நானும் என் சகோதரர்களும் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. விவசாய நிலங்களில் நான் திருமணம் முடித்த காலம் முதல் விவசாயம் எதுவும் செய்யவில்லை. விவசாய நிலங்களில் நான் திருமணம் முடித்த காலம் முதல் விவசாயம் எதுவும் செய்யவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் திருமணத்திற்கு பிறகும் நாங்கள் தனித்தனியாக விவசாயம் செய்து வருகிறோம் என்றும் சொன்னால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)